**சாவுக்கு ஒத்திகை**

பிணமாக நடிப்பவர்கள்
தினந்தோறும் கோடம்பாக்கம் மார்க்கெட்டில்
காய்கறி வாங்கிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறேன்.
முகத்தில் ஈ மொய்த்தபோது கூட
பிணமாக நடித்துப் பேர் வாங்கிய நடிகரைப்
பிரெஞ்சு மொழி வகுப்பில் சந்தித்தேன்.
வாய்க்கரிசி போடும் காட்சியில் நடித்த பாட்டி
அரிசி வாங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தபோது
ஏனோ துணுக்குற்றேன்.
தாங்கள் பிணமாக நடித்த காட்சிகளின் புகைப்படங்களை
அவர்கள் வாட்ஸ் அப்பில் பகிர்ந்து
விருப்பக் குறிகளை குவித்துக் கொண்டிருந்தனர்.
சாவுதான் வாழ்வின் இறுதி லட்சியம் என்றாலும்
பிணமாக நடிப்பவர்களுக்குத் தெரியும்
அடிக்கடி சாவதைப்போல் நடிப்பது
மரணத்தைப் பகடி செய்வது என்று.
. --- 13 செப்டம்பர் 2020

